# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:26** **தேதி:09.03.2015**

## ஓய்வூதிய பலன்கள் மற்றும் சில செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

ஓய்வூதிய பலன்கள் முறையான காலத்தில் பெற்றிட கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ள உத்தரவின் சாராம்சத்தையும், மனித வளம் தொடர்பாக நமது மத்திய சங்கம் கொடுத்துள்ள கடிதத்தின் தமிழாக்கத்தையும் உங்களின் பார்வைக்கு முன் வைக்கிறோம்.

### ஓய்வூதிய பலன்கள் காலத்தே பெற்றிட கார்ப்பரேட் அலுவலக வழிகாட்டுதல்கள்

ஓய்வூதிய பலன்கள் ஊழியர்களுக்கு உரிய காலத்தில் கிடைக்க வேண்டும் என நமது மத்திய சங்கம் வலியுறுத்தியதின் அடிப்படையில் 13.02.2015 அன்று DOT, CCA மற்றும் BSNL அதிகாரிகள் அடங்கிய ஒரு கூட்டம் டெல்லியில் நடைபெற்றது அதன் அடிப்படையில் வழிகாட்டுதல் உத்தரவுகளை கார்ப்பரேட் அலுவலகம் 02.03.2015 அன்று வெளியிட்டுள்ளது.

1) ஓய்வுபெற உள்ள ஊழியர்களின் அனைத்து மனுக்களையும் அவர் ஓய்வு பெறும் தேதிக்கு ஆறுமாதங்களுக்கு முன்பாகவே சம்பந்தப்பட்ட CCA அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். அதற்கான பணிகளை நமது அலுவலகங்களில் எட்டு மாத காலத்திற்கு முன்பாகவே அவரிடம் மனுக்களை பெறும் பணிகள் துவங்க வேண்டும்.
2) அப்படி அனுப்பப்படும் தேதி வரையிலான அனைத்து விஷயங்களும் சரி செய்து அனுப்ப வேண்டும்.
3) இதனை உறுதி செய்ய மாநில அலுவலகங்களில் இருந்து மனுக்களை பெறுவதற்கு அந்த ஊழியர்களை தொடர்பு கொள்ள வேண்டும். அவ்வாறு அவர் மனுக்களை தரத் தவறினால் மாநில இணையதளத்தில் அவரது பெயரை வெளியிட வேண்டும். அவர் மனுக்களை கொடுத்த உடன் அவரது பெயர் இணையதளத்தில் இருந்து உடனடியாக நீக்கிவிட வேண்டும்.
4) அடுத்த 24 மாதங்களில் ஓய்வு பெற உள்ளவர்களின் பட்டியலை ஓவ்வொரு ஜனவரி மற்றும் ஜூலை 1ம் தேதிகளிலும் வெளியிட வேண்டும். இதனை மாநில அலுவலகம் மற்றும் CCA அலுவலகங்களுக்கு அனுப்ப வேண்டும். மாற்றல், விருப்பஓய்வு, பணி விலகல், மரணம் உள்ளிட்டவைகள் அவ்வப்போது அதில் இணைக்க வேண்டும்.
5) ஒவ்வொரு ஓய்வுபெற உள்ளவர்களின் மனுக்களை அனுப்புவதற்கு முன், தேவையற்ற கால தாமதத்தை தவிர்க்கும் வகையில், அவை அனைத்து அம்சங்களிலும் நிறைவு பெற்றுள்ளதா என்பதை சரி பார்க்க வேண்டும். அடிக்கடி CCA அலுவலகங்களிலிருந்து கேட்கப்படும் கேள்விகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
6) மாநில அளவில் DGM அளவிலான ஒரு அதிகாரி இதற்கு பொறுப்பாக நியமிக்க வேண்டும். அவர் மாதம் ஒரு முறை CCA அதிகாரிகளுடன் கூடிப் பேசி வரும் பிரச்சனைகளை தீர்வு காண வேண்டும்.

## நிர்வாகத்தின் HR PLAN தொடர்பாக நமது சங்கத்தின் நிலைபாடு

வல்லுனர்களின் பரிந்துரை மற்றும் HR PLAN தொடர்பாக நமது மத்திய சங்கம் 02.03.2015 அன்று BSNLன் CMDக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளது. அதில் உள்ள விவரங்களை உங்களின் பார்வைக்கு முன்வைக்கிறோம்.

"நிலம், ஊழியர் குடியிருப்பு, காலியிடங்களை பணமாக்குவது தொடர்பாக தனது பரிந்துரைகளை நிர்வாகக் குழு தொலைதொடர்பு துறைக்கு அனுப்பியுள்ளது. ஊழியர்கள் இந்த நிறுவனத்தின் முக்கியமான பங்குதாரர்கள் என்ற அடிப்படையில் இது போன்ற முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்னர் அவர்களின் பிரதிநிதிகளை கலந்தாலோசிக்க வேண்டுமென நாங்கள் முதலில் தெரிவிக்க விரும்புகிறோம். தற்போது இது தொடர்பாக எங்களுக்கு எந்த ஒரு விவரமும் தெரியாமல் உள்ளோம். எனவே இது தொடர்பாக உடனடியாக தொழிற்சங்கங்களோடு விவாதிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

மனித வளம் தொடர்பாக நிர்வாகக் குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக கீழ்கண்டவற்றை உங்களின் பார்வைக்கு கொண்டு வருகிறோம்.

1. SSAக்களை AREAக்களாக மாற்றும் விஷயத்தில், ஊழியர்கள் SSA கேடர்கள் என்ற அடிப்படையில் அவர்களை சிரமத்துக்கு உள்ளாக்கக்கூடாது. SSAக்களை AREAக்களாக மாற்றும் நடைமுறை என்னவென்றும், அதனால் ஊழியர்களின் மீது ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாக தெரிவிக்க வேண்டும்.
2. சிக்கலான திறமைகளை கைகொள்வதற்காக நிர்வாகம் ஒப்பந்த (OFF ROLL) அடிப்படையில் ஆட்களை எடுக்கும் நிர்வாகத்தின் முன்முயற்சியினை நாங்கம் கடுமையாக எதிர்க்கிறோம். எனவே அதனை கைவிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.
3. டெலிகாம் ஃபேக்டரியில் உள்ள ஊழியர்களை, அவர்கள் ஓய்வு பெறும் வரை SUPER NUMERARY என வைத்துக்கொள்வது என்பதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். பல ஆண்டு காலமாக, பல்வேறு காரணங்களுக்காக, டெலிகாம் ஃபேக்டரிகளில் கருவிகள் மற்றும் உபகரணங்களை தயாரிப்பதற்கு பதிலாக, இந்த நிறுவனத்தின் உயர் மட்ட நிர்வாகம் தனியார் நிறுவனங்களில் இருந்து வாங்குவதையே முன்னிலை படுத்தி வந்தது. டெலிகாம் ஃபேக்டரிகளின் தற்போதையான சிக்கலான நிலைக்கு இந்த கொள்கைகள் தான் காரணம். டெலிகாம் ஃபேக்டரிகளின் புத்தாக்கம் தொடர்பாக எங்கள் சங்கத்தின் தெளிவான கோரிக்கைகளை ஏற்கனவே நிர்வாகத்தின் முன் வைத்துள்ளோம். BSNLக்கு தேவையான கருவிகளையும், உபகரணங்களையும் தயாரிப்பதற்கு இந்த டெலிகாம் ஃபேக்டரிகளில் உள்ள பரந்துபட்ட நிலபரப்பையும், அங்குள்ள கட்டமைப்பையும், அனுபவம் வாய்ந்த மனித வளத்தையும் பயன்படுத்த வேண்டும். இதற்கு மூலதனமும், நவீன தொழில்நுட்ப அறிவு கொண்ட புதிய தொழிலாளர்களை வேலைக்கு எடுப்பதும் தேவைப்படுகிறது. இந்த நிறுவனத்தின் நீண்ட நாளைய நலனை கணக்கில் கொண்டு நிர்வாகம் இந்த முன்மொழிவை பரிசீலித்து அமுல் படுத்த வேண்டும்.
4. 50% ஊழியர்கள் உபரி என்கின்ற வல்லுனர் குழு மற்றும் நிர்வாகக் குழுவின் கருத்துக்களை நாங்கள் முற்றிலும் நிராகரிப்பதுடன், அரசாங்கதிடம் இருந்து ஊதிய உதவி பெறுவது என்கிற கருத்தையும் நாங்கள் எதிர்க்கிறோம். கடந்த பத்தாண்டுகளில் ஒரு லட்சம் ஊழியர்கள் ஓய்வு பெற்றுள்ள சூழலில், 50% ஊழியர்கள் உபரி என்கிற

நிர்வாக்த்தின் தத்துவம் ஏற்றுக் கொள்ள முடியாதது. தற்போதுள்ளதை விட ஒரு லட்சம் ஊழியர்கள் அதிகமாக இருந்த போதும் 2005ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் 10000 கோடி ரூபாய்களை லாபமாக ஈட்டியது என்பது மறுக்க முடியாத உண்மை. வருமானத்தி ஏற்பட்ட கடுமையான இழப்பே, தற்போதைய சிக்கலுக்கு காரணம். எனவே இந்த நிறுவனத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை கண்டு பிடிக்க வேண்டும். அரசாங்கத்திடம் இருந்து ஊதிய உதவியை கோருவதற்கு பதிலாக, கிராமப்புற தரைவழி சேவைகளால் ஏற்படும் நஷ்டத்திற்காக நியாயமாக அரசாங்கம் தர வேண்டிய இழப்பீட்டை நிர்வாகம் வலியுறுத்தி பெற வேண்டும்.

மேலே கூறப்பட்ட விஷயங்களின் மீதான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்."

## BSNL மனிதவள இயக்குனராக திருமதி சுஜாதா ரே தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்

பொதுத்துறை நிறுவனங்களின் தேர்வு வாரியம் (PSEB) BSNLன் மனிதவள இயக்குனராக (DIRECTOR(HR)) BSNLல் தற்போது ED(FINANCE) ஆக உள்ள திருமதி சுஜாதா ரே அவர்களை தேர்வு செய்துள்ளது. கிட்டத்தட்ட மூன்றாண்டுகள் காலியாக இருந்த மனிதவள இயக்குனர் பதவி விரைவில் நிரப்பப்பட உள்ளது. இது FORUMத்தின் முக்கியமான கோரிக்கைகளின் ஒன்று. ஏற்கனவே நிதித்துறை இயக்குனராக (DIRECTOR(FINANCE) PSEB திருமதி யோஜனா தாஸ் அவர்களை தேர்வு செய்துள்ளது. மொத்தமுள்ள இயக்குனர்களில் இரண்டு பெண் இயக்குனர்களை BSNL விரைவில் பெற உள்ளது. திருமதி சுஜாதா ரே அவர்களை BSNL ஊழியர் சங்கம் பாராட்டுகிறது.

## தேசியக் கவுன்சில் கூட்டத்தை விரைவில் நடத்துக

32ஆவது தேசியக் கவுன்சில் கூட்டம் டிசம்பர் மாதத்தில் நடைபெற்றது. ஆனால் நிர்வாகம் அந்தக் கூட்டத்தை கூட்ட இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. 03.03.2015 அன்று Sr.GM(SR) திரு ஷமீம் அக்தர் அவர்களை சந்தித்த BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் மேலும் காலதாமதப்படுத்தாமல் இந்தக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என வலியுறுத்தினார். வெளி நாடு சென்றுள்ள நமது DIRECTOR(HR) அவர்கள் நாடு திரும்பியவுடன் அடுத்தக் கூட்டத்திற்கான தேதியை அடுத்த வாரம் முடிவு செய்யலாம் என Sr.GM(SR) தெரிவித்தார்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**